சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
இண்டர்நெட் முகவரி:
http://www.dinamani.com

# தினமணி

திங்கள்கிழமை
11 மே. 2009
சென்னை
12 பக்கங்கள் ரூ.3

# ஓய்வூதியம் ரூ. 10 லட்சம் பொதுமக்களுக்கு நன்கொடை

## பாலம் கலியாணசுந்தரனார் வழங்கினார்

சென்னை, மே 10: பதினொன்று ஆண்டு கால அரசு சம்பளம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத்தொகை ரூ. 10 லட்சத்தை நாட்டு மக்களுக்கு நன்கொடையாக வழங்கினார் அன்பு பாலம் அமைப்பின் நிறுவனத் தலைவர் கலியாணசுந்தரனார்.

பாலம் கலியாணசுந்தரனாரின் 70 வது பிறந்தநாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ. 10 லட்சத்துக்கான காசோலையை மகாத்மா காந்தியின் தனிச் செயலராக இருந்த வெ. கல்யாணத்திடம் வழங்கினார்.

இந்தியன் வங்கி தலைவர் சுந்தரராஜன், தொழிலதிபர் வி.ஜி. சந்தோசம், மகாத்மா காந்தி இலவச நூலகம் நடத்துனர் மகாலிங்கம், பொறியாளர் தாமோதரன், தியாகி துளசிங்கம் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நாட்டு மக்களின் நலனுக்காக தன்னுடைய ஓய்வூதியத் தொகை ரூ. 10 லட்சத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார் பாலம் கலியாணசுந்தரனார்.

தனது குடும்பச் சொத்து ரூ. 50 லட்சம், ஊதிய நிலுவைத் தொகை ஒரு லட்சத்து 11 ஆயிரம் ரூபாய், ஓய்வூதியப் பலன்கள் ரூ. 10 லட்சம், ஊதியத்திலிருந்து ரூ. 30 லட்சம் உள்ளிட்டவற்றை பொதுமக்களின் நலனுக்காக ஏற்கெனவே அவர் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.




பாலம் கல்யாணசுந்தரத்தின் 70-வது பிறந்த நாளையொட்டி ரூ.10 லட்சத்திற்கான காசோலையை மகாத்மா காந்தியின் தனிச் செயலர் வெ.கல்யாணத்திடம் வழங்குகிறார் பாலம் கல்யாணசுந்தரம்.